# கல்விக் கோட்டம் - நல்லூர் யாழ்ப்பாணம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2013

தரம் - 5 தமிழ்

பெயர் :............................................................................ நேரம் : 1 மணித்தியாலம்

**01) பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக**

அது ஒரு பெரிய காடு. விரிக்கப்பட்ட பச்சைக் குடைகளைப்போன்ற விருட்சங்கள். அங்கு நிறைந்திருந்தன. மாதவன் அங்குமிங்கும் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. "சுற்றுலாவந்த நண்பர்களைத் தவறவிட்டுவிட்டேனே" என்று கலங்கினான். கண்ணும் கருத்துமாக வளர்த்த பெற்றோர் மட்டுமே அவன் கண்முன்னே தோன்றினர். அவன்கால்போனபோக்கில் நடக்கலானான். வெளிச்சம் மங்கி மெல்ல மெல்ல இருள் பரவத்தொடங்கியது. மிகத் தொலைவில் காட்டு நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. பீதியினால் அவன் உடல் நடுங்கியது. அப்போது. தூரத்தே மாதவா! மாதவா! என்று கூப்பிடும் சத்தம் எதிரொலித்தது. திரும்பிப் பார்த்தான். வகுப்பாசிரியர் பதற்றத்துடன் வந்து கொண்டிருந்தார். வகுப்பாசிரியரைக் கண்ட மாதவன் அவரை நோக்கி ஓடினான்.

1. பாடசாலையினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் பங்கு கொண்டபோதே மாதவன் தவறிவிடப்பட்டான். பாடசாலை ஒழுங்கு செய்த அந்த நிகழ்வு எது?

   ( ........................................................................................................ )

2. நண்பர்கள் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

   ( ........................................................................................................ )

3. பீதி என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

   ( ........................................................................................................ )

4. இங்கு இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக.

   ( ........................................................................................................ )

5. காட்டுக்குள் நண்பர்களைத் தவறிவிட்ட மாதவன் முதலில் யாரை நினைத்தான்?

   ( ........................................................................................................ )

6. மாதவனைக் காட்டுக்குள்ளே தேடிக்கண்டு பிடித்தவர் யார்?

   ( ........................................................................................................ )

7. இங்கு இடம் பெற்றுள்ள பெயர் அடைமொழிச்சொல் எது?

   ( ........................................................................................................ )

8. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.

   ( ........................................................................................................ )

9. தாய் தந்தையரைக் குறிக்கும் தனிச்சொல்லை எழுதுக.

   ( ........................................................................................................ )

10. வகுப்பாசிரியர் என்பதைப்பிரித்து எழுதுக.

   ( ........................................................................................................ )

(10 புள்ளி)



kalvi.lk

02) அடைப்பில் இருக்கும் பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து சொற்களைப் பூரணப்படுத்துக.

ன , ண , ல , ழ

1. நூ ........... கம்  2. மா ...........வன்  3. வ ...........க்கு  4. விமா ..............ம்

03) சரியான விடையின் கீழ் கோடிடுக. (4 புள்ளி)

1. நாங்கள் பாடசாலைக்குச் சென்றோம். இதில் நாங்கள் என்பது.
   1) தன்மை  2) முன்னிலை  3) படர்க்கை
2. நீங்கள் பாடசாலைக்கு வரவில்லையா ? இதில் நீங்கள் குறிப்பது.
   1) தன்மை  2) முன்னிலை  3) படர்க்கை
3. "க" மாற்றொலியாக அமைந்த சொல்
   1) கதவு  2) கரும்பு  3) தாகம்
4. கி இயல்பொலியாக அமைந்த சொல்.
   1) கிழவி  2) அகிலம்  3) முகில்

04) பின்வரும் சொற்களில் சரியாக எழுதப்பட்ட சொல் (4 புள்ளி)

1. இராட்சியம் , இராச்சியம் , இறாச்சியம் , இறாட்சியம்
2. உள்ளூராட்சி , உள்லுராட்சி , உல்லூராட்சி , உள்ளுராட்சி

05) பின்வரும் பேச்சுவழக்குச் சொற்களை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக

1. இளனி ..............................  2. இங்கனம் .............................. (2 புள்ளி)

06) கீறிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எழுதி வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

1) மெ ........குவர்த்தியின் வெ.........ச்சத்தினால் இரு ....... வி........கியது.

2) வைத்தியசாலையில் ...........யாளிகள் பருக வெ ........ ......... ர் கொடுக்கப்பட்டது.

(6 புள்ளி)

07) அடைப்பிலுள்ள சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

1. அவன் எய்த .......................... பட்டு மான் கீழே விழுந்தது.
   ( பானம் , பாணம் )

2. சுதந்திரதின .............................. விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.
   ( விலா , விழா)

(2 புள்ளி)

08) பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. தலைவா வருக வருக
2. ஆதிகாலத்தில் தரைமார்க்கமாகச் செல்வதற்கு மாட்டுவண்டி குதிரைவண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்

(2 புள்ளி)

09) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

1. கண்வளர்த்தல் ..........................................................................................

2. தோள்கொடுத்தல் ..........................................................................................

10) பின்வரும் சொற்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக. (2 புள்ளி)

1. முனிவர்கள் வாழும் இடம் ..........................................................................

2. அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா ......................................

(2 புள்ளி)



kalvi.lk

11) சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1. கேட்ட / ஓடி/ கர்ச்சனையை / விலங்குகள் / ஒளித்தன / அனைத்தும் /சிங்கத்தின்

..............................................................................................................................................

2. பின்னர் /சிறிது/ உடம்புக்கு/ உலவுவது/ உணவு /தூரம் /நல்லது /உண்ட

..............................................................................................................................................

12) ஒருமைவாக்கியத்தை பன்மைவாக்கியமாக எழுதுக. (4 புள்ளி)

1. பறவை வானில் பறந்தது.

..............................................................................................................................................

2. அவன் பாடசாலைக்குச் சென்றான்.

..............................................................................................................................................

13) சங்கர் ஒரு வலையை விரித்தான். இந்த வாக்கியத்தில் வந்துள்ள. (4 புள்ளி)

1. எழுவாய்ச் சொல் எது? ..............................................................................

2. செயற்படுபொருளை எழுதுக ..............................................................................

(2 புள்ளி)

14) நீ அழகான மேனியைக் கொண்டிருக்கின்றாய்.

1. பெயர் அடைமொழிச் சொல் எது? ..............................................................................

2. முன்னிலை ஒருமைப் பெயர்ச் சொல் எது? ..............................................................................

(2புள்ளி)

15) பழமொழிகளுக்கு கருத்தை எழுதுக.

1. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

..............................................................................................................................................

2. இரக்கப் போனாலும் சிறக்கப்போ.

..............................................................................................................................................

16) பின்வரும் சொற்களை பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் எழுதுக. (4 புள்ளி)

1.கரை

பெயர்..............................................................................

வினை ..............................................................................

2.பார்

பெயர்..............................................................................

வினை ..............................................................................

(4 புள்ளி)

17) பின்வரும் சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் கருத்தை எழுதுக.

1. இ. போ. ச ..............................................................................


2. இ.மி.ச ..............................................................................

(4 புள்ளி)

18) பின்வரும் குறியீடுகள் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.



..............................................................................



..............................................................................

(2 புள்ளி)

Education கல்வி அධ්‍යාපන

19) பின்வரும் வாக்கியங்களை இரண்டு தனிவாக்கியங்களாக எழுதுக.

1. தோட்டத்தில் கீரையும் , பூக்களும் காணப்பட்டன.

1. ..............................................................................................................

2. ..............................................................................................................

2. அக்காவுக்கும் , மாமாவுக்கும் தோட்டங்கள் இருந்தன. (4 புள்ளி)

1. ..............................................................................................................

2. ..............................................................................................................

(4 புள்ளி)

20) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான இரட்டைக்கிளவிச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.

( கட கட , பட பட, குளு குளு)

1. காற்று .................................................. என்று வீசியது.

2. வெடிகள் .................................................. என்று வெடித்தன.

(2 புள்ளி)

21) கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான இணைமொழிச் சொற்களைத் தெரிவுசெய்து எழுதுக. ( மேடுபள்ளம் , நன்மைதீமை , ஏழைஎளியவர், சீரும்சிறப்பு )

1. அவர்கள் ...................................களில் பங்குபற்றினர்.

2. வாழ்க்கை ................................... நிறைந்தது.

3. ................................... களுக்கு உதவுவது ஓர் உத்தம குணமாகும்.

4. அவர்கள் ................................... மாக வாழ்ந்து வந்தனர்.

(4 புள்ளி)

22) சேர்த்தெழுதுக

1. வடக்கு + மாகாணம் ...................................................

2. புகை + இலை ...................................................

(4 புள்ளி)

23) பிரித்து எழுதுக

1.காவியுடை ...................................................

2. தேனீர் ...................................................

(4 புள்ளி)

24) பின்வரும் இடைவெளிக்குப் பொருத்தமான இளமைப் பெயர்களை எழுதுக.

1. தாயைக் கண்ட பசுக் ................................................ துள்ளி ஓடியது.

2. நாங்கள் தோட்டத்தில் வாழைக் ................................................ நட்டோம்.

(2 புள்ளி)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

5. பொருத்தமான ஒலி மரபுகளை எழுதுக

1. குதிரை கனைக்கும் போல கழுதை ..........................................................................

2. மயில் அகவும் போல புறா ..........................................................................

26. பின்வரும் விடுகதைகளுக்கான விடைகளை எழுதுக. (2 புள்ளி)

1. கண்ணுக்குத்தெரியாதவன் உயிருக்கு உகந்தவன். அவன் யார்?

..........................................................................

2. தன்னிடம் சேருபவனை தன்னைப் போல மாற்றுவான். அவன் யார்?

..........................................................................

(2புள்ளி)

27. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து எழுதுக.


1. முன்னொரு காலத்தில் தசரதமன்னன் கோசல நாட்டை ஆண்டு ..........................................................................
(வருகின்றான் , வந்தான்)

2. மகாத்மாகாந்தி சத்தியமே கடவுள் என்று வாழ்ந்து. ..........................................................................
(காட்டியது , காட்டியவர் ) ஆவார்.

3. பிரபும் , பாபுவும் ஒரே கிராமத்தில் .......................................... (வாழ்ந்தவர்கள் , வாழ்ந்தவன் )

4. .......................................... (நாம் , நான் ) எப்போதும் சுத்தமாக இருப்போம். (4 புள்ளி)

28. கீழே தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து கதை ஒன்றை ஆக்கி எழுதுக. ஒருவாக்கியத்தில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.



1. ..........................................................................
..........................................................................

2. ..........................................................................
..........................................................................

3. ..........................................................................
..........................................................................

4. ..........................................................................
..........................................................................

(8 புள்ளி)

kalvi.lk